JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 103/2018 |
| | : | Prosecution P.W - 4 |
| NAME | : | சில்வியா ஜாஸ்மின் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 26.03.2026

முதல் விசாரணை (Through VC)

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் அப்பயநாயக்கன்பட்டியில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2017 ம் ஆண்டு கடையநல்லூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்த போது 19.05.2017 ம் தேதி 10.00 மணிக்கு பாத்திமா பர்சானா, க.பெ. மைதீன் கனி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கடையநல்லூர் காவல்நிலைய குற்ற எண் 213/2017 பிரிவுகள் 420,506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் மனுவின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு 13 மணிக்கு சென்று சாட்சிகள் அப்துல் காதர் என்ற சமதானி , முஸ்தபாகமால் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ சாட்சிகளான

பர்சானா, ராபியா, முகமது மைதீன், முஸ்தபா கமால், முகமது ரியாஸ், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரியான சர்புதின் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று பிணையில் சென்றுவிட்டதால் கைது செய்யவில்லை. பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையானதால் இதச பிரிவுகள் 420,506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ன் ன் கீழ் இறுதி அறிக்கை 29.05.2017 ல் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

தாரு இஸ்லாம் பள்ளியில் எதிரி 2009 ல் வேலை வாங்கி தருவதாகதான் புகாரில் உள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் 1 வது சாட்சி பாத்திமா பர்சானா எதிரியிடம் தாருஇஸ்லாம் பள்ளியில் வேலை வாங்கி தருவதாக தான் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். 2009 முதல் 2012 வரை தாரு இஸ்லாம் பள்ளியில் வேலை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். என் விசாரணையில் பணம் வாங்கிய பின்பு எந்த ஒரு நாளும் அவர் பள்ளிக்கு செல்லவில்லை என்று தானே சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அவர் தற்காலிகமாக வேலை வாங்கி கொடுத்தார் என்றும் அதனால் தற்காலிக வேலை என்பதால் இரண்டு ஆண்டுகளுக்கு பின்பு வேலையை விட்டு நிறுத்தி விட்டார் என்று என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புது நிர்வாகம் வந்ததால் அவர்கள் தான் வேலையை விட்டு நிறுத்தினார்கள் என்று என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் தாருஇஸ்லாம் பள்ளியில் வேலைக்கு சேர்ந்தாரா இல்லையா என்று ஆவணங்களை பார்த்தேனா என்றால் ஆவணங்கள் தருவதாக சொன்னார்கள்.

ஆவணம் பெறுவதற்கு என்ன முயற்சி செய்தேன் என்றால் எந்த ஆவணத்தையும் காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை. நான் சென்று அந்த பள்ளியில் ஆவணங்களில் பாத்திமா பர்சனா அங்கு வேலை செய்தாரா என்று பார்த்தேனா என்றால் இல்லை. அந்த பள்ளி அரசு உதவி பெறும் பள்ளி என்றால் சரிதான். அவ்வாறு உள்ள பள்ளிகளில் ஆசிரியர்நியமனம் சட்ட விதிகளுக்கு உட்பட்டு தான் செய்யப்படும் என்றால் சரிதான். ஒரு வேளை சட்ட விதிகளுக்கு உட்பட்டு தான் நியமிக்கப்படும் என்றால் அதை கையூட்டு கொடுத்து பெறுவது என்பது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரிதான். அவ்வாறு ரூபாய் பெற்றுக் கொண்டு நியமனம் செய்வது என்று சொல்லும் ஒப்பந்தமே சட்டப்படி நிறைவேற்றக்கூடியது அல்ல என்றால் சரிதான். ரூ.9 லட்சம் ரூபாயில் ரூ.3 லட்சத்து இருபத்திஐந்தாயிரம் முகமது மைதீன் என்பவரிடமிருந்தும் முஸ்தபா கமால் என்பவரிடமிருந்து ரூ.2 லட்சத்து ஐம்பதாயிரம் மீத தொகை

வாதியிடமிருந்ததாக சொன்னார். இந்த பணம் அந்த 3 பேருக்கும் எவ்வாறு வந்தது என்பதற்கான ஆவணங்களை பரிசீலிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அருகே நிறைய வீடு உள்ளது என்றால் சரிதான். அது மாலை நேரம் என்பதால் பக்கத்தில் அதிக ஆட்கள் இருந்தார்களா என்றால் தெரியாது.

சம்பவம் எங்கு நடந்ததாக விசாரணையில் தெரியவந்தது என்றால் 07.02.2017 ஆகும். என்றைக்கு புகார் கொடுத்தார் என்றால் 19.05.2017 அன்று புகார் கொடுத்தார். இந்த மிகப்பெரிய காலதாமதத்திற்கு என்ன காரணம் என சொன்னார்கள் என்றால் புகார்தாரரின் கணவர் சொல்லி புகார் கொடுத்தார். ஏன் அவர் கணவரிடம் இந்த தகவலை சொல்லவில்லை என்றால் கணவர் வெளிநாட்டில் இருந்ததால் கணவரிடம் தகவல் சொல்லி புகார் கொடுத்தாக சொன்னார். எந்த தேதியில் தகவல் சொன்னார், எந்த தேதியில் அவர் கணவர் புகார் கொடுக்க சொன்னார் என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை. 90 நாட்கள் காலதாமதத்திற்கு எந்த வித சிறப்பு காரணமும் சொல்லவில்லை என்றால் சரிதான். பள்ளியில் வேலை செய்ததாக காண்பிப்பதற்கு எந்த ஆவணங்களும் என்னால் கைப்பபற்றப்படவில்லை என்றால் சரிதான். கடைசி வரை வேலை வாங்கி தரவில்லை என்பது தான் என் விசாரணையில் கண்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் தற்காலிக வேலை வாங்கி தந்தார் ஆனால் நிரந்தர வேலை வாங்கி தரவில்லை என்று என் விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சொன்ன நாள், நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் 07.02.2017 ம் தேதி 1 வது சாட்சி கடைக்கு போய்விட்டு வரும் போது அவரை படுக்கையறைக்கு அழைத்ததாக சொல்வது மற்ற அனைத்து சங்கதிகள் பற்றி சொல்லி உள்ளதும் பொய் என்றால் சரியல்ல. என் விசாரணை முழுமையாக விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக விசாரித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi